முருகப்பெருமான் துணை

**மகான் குங்கிலியக்கலய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.10.2023**, திங்கட்கிழமை

1. மறை போற்றும் தருமபலம்
   மண்ணுலகில் படைத்த நல்
   அறம் வென்ற ஞான குருவே
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சோபகிருது தரிவை திங்கள்
   இனிமைபட இருபானீர் திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22 ம் நாள், 09.10.2023, திங்கட்கிழமை)
   இயம்பிடுவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை குங்கிலியக்கலய நாயனாரும்
   அறிவிப்பேன் உலகநலம் காண
   வாசிவென்ற மகான்கள் படை
   வரம் தந்து அரங்கமகானுடன்
4. மகானுடன் பிரணவக் குடிலில்
   மகா சக்தியாக கலந்திருக்க
   வகைபட கலியுக மக்கள்
   வணங்கிவர அரங்கன் வழி
5. அரங்கன் வழி அவரவர் தனக்கும்
   ஆற்றல் கூடும் ஞானபலமாக
   வரங்கள் தானும் கிட்டகிட்ட
   வந்தநல் பிறவி நோக்கம்தனை
6. நோக்கம் தனை அறியப்பெற்று
   நிலையா மாயை கடந்து
   ஆக்கமுடன் ஆன்மா தேறவே
   அதற்கான சேவை ஆற்றும்

7. ஆற்றும் தன்நிலை உணர்ந்து
அறமே தக்கவழி என அறிந்து
ஏற்றுமே அரங்கன் அன்னதான
இணையிலா சேவையில் கலந்து
8. கலந்துமே தொண்டுபுரிந்து
கருமவினை கரைந்தோடவே
பலந்தனை உலகோர் அடைவர்
பாவ வழிகள் தனை விட்டு
9. விட்டுமே தன் நலம் சுயநலம்
வினைவழி மனநிலை கடந்துமே
தட்டாது உலக சேமம் வழி
தன்னார்வத் தொண்டர்களாகி
10. ஆகியே அரங்கன் கரங்கள்
ஆசி துணைபட உயர் சேவை
அகிலம் மாற்றும் வண்ணம்
ஆக்கமுடன் இயக்கிச் சிறப்பர்
11. சிறப்பர் தெளிவு திடமுற
சித்திகளும் தானடைந்து
அறப்போர் தனை நடத்தியே
ஆன்மீக ஞான ஆட்சிபடைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—